T.C: 177

143/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SOCIAL WELFARE DEPARTMENTAL EXAMINATION
## PAPER – V – ADVANCED LAW

(Without Books)

Maximum Time : 30 minutes                                                    Maximum Marks : 20

***IMPORTANT INSTRUCTIONS***

**OBJECTIVE TYPE**

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 20 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **<u>within first 10 minutes</u>** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 20 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

**[Turn over**

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C), and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.
(b) In any case, a candidate shall choose only one response for each question.
(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**
(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)
(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**
(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**
(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Voluntarily throwing or attempting to throw acid is an offence punishable under Indian Penal Code,

(A) Section 326A (B) Section 326B
(C) Section 228A (D) Section 228

தன்னிச்சையாக, அமிலம் வீசுதல் அல்லது முயற்சித்தல், இந்திய தண்டனைச் சட்டத்தில் இதன்படி, தண்டனைக் குற்றமாகும்

(A) பிரிவு 326A (B) பிரிவு 326B
(C) பிரிவு 228A (D) பிரிவு 228

2. Under section 60 of Indian Penal Code, the sentence of imprisonment is not

(A) wholly rigorous (B) wholly simple
(C) partly rigorous and partly simple (D) Simple with fine

இந்திய தண்டனைச் சட்டத்தில், பிரிவு 60ன் படி, சிறைதண்டனை விதித்தல் இவ்வாறு அல்ல

(A) முழுவதும் கடுங்காவல் (B) முழுவதும் சாதாரண
(C) கடுங்காவல் பாதி மற்றும் சாதாரண பாதி (D) அபராதத்துடன் சாதாரண

3. Section 73 of Indian Penal Code provides for the maximum limit of solitary confinement to be

(A) one year (B) two years
(C) three months (D) six months

இந்திய தண்டனைச் சட்டத்தில், பிரிவு 73ன் படி அதிகபட்ச தனிமை சிறைதண்டனையின் அளவு

(A) ஓராண்டு (B) இரண்டாண்டுகள்
(C) மூன்று மாதங்கள் (D) ஆறு மாதங்கள்

4. Section 121A of IPC deals with

(A) Conspiring to commit offence against the government
(B) Collecting arms to wage war against the state
(C) Concealing with intent to facilitate a design to wage war
(D) Attempting to wage war

இ.த.ச. பிரிவு 121A குறிப்பிடுவது

(A) அரசுக்கு எதிரான குற்றம் விளைவிக்க கூட்டு சதி செய்தல்
(B) அரசுக்கு எதிராக போர் தொடுக்க ஆயுதங்களை சேகரிப்பது
(C) போர் தொடுக்கும் திட்டத்தை எளிதாக்கும் பொருட்டு மறைத்து வைத்தல்
(D) போர் தொடுக்க முயற்ச்சித்தல்

5. In which section of IPC it states that the public servant voluntarily allowing prisoner of State, in his custody of escape?

(A) Section 128
(B) Section 129
(C) Section 130
(D) Section 127

பொது ஊழியர், தன்வசம் உள்ள சிறைக்கைதியை வேண்டுமென்றே விடுவிப்பது பற்றி குறிப்பிட்டுள்ள இ.த.ச. பிரிவு

(A) பிரிவு 128
(B) பிரிவு 129
(C) பிரிவு 130
(D) பிரிவு 127

6. Under Indian Penal Code, refusing oath, when duly required by a public servant attracts

(A) Section 177
(B) Section 178
(C) Section 179
(D) Section 180

ஒரு பொது ஊழியர் முறையாக எடுக்க வேண்டிய உறுதிமொழியை எடுக்க மறுப்பது, இந்திய தண்டனை சட்டம் எப்பிரிவை கவர்கிறது.

(A) பிரிவு 177
(B) பிரிவு 178
(C) பிரிவு 179
(D) பிரிவு 180

7. The term "any person" mentioned in criminal breach of contracts of service under the chapter XIX of IPC deals with

(A) Youth and Unsoundness of mind
(B) Lunatic
(C) Insolvent
(D) Idiot

இந்திய தண்டனை சட்டம், அத்தியாயம் 19-ல் குற்றமுறு ஒப்பந்த மீறுகையில் "எந்த நபர்" என குறிப்பிடுவது

(A) இளைஞர் மற்றும் புத்தி சுவாதினமற்றவர்
(B) பித்துபிடித்தவர்
(C) நொடிப்பு நிலை அடைந்தவர்
(D) முட்டாள்

8. Section 43 of Cr.P.C deals with

(A) Arrest by private person
(B) Arrest by police
(C) Arrest by Magistrate
(D) Arrest by public servant

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 43 குறிப்பிடுவது

(A) தனிநபர் மூலம் கைது செய்வது
(B) காவலதிகாரி மூலம் கைது செய்வது
(C) குற்றவியல் நடுவரால் கைது செய்வது
(D) பொது ஊழியரால் கைது செய்வது

9. A person arrested by police officer without warrant shall not be detained in custody for more than

(A) 48 hours
(B) 36 hours
(C) 24 hours
(D) 12 hours

காவல் அதிகாரி ஒருவர், பிடியாணை இல்லாமல் ஒரு நபரை கைது செய்து, தன்வசம் கீழ்கண்ட நேரத்திற்கு மேல் வைத்திருக்க முடியாது

(A) 48 மணிநேரம்
(B) 36 மணிநேரம்
(C) 24 மணிநேரம்
(D) 12 மணிநேரம்

10. The claim preferred or objection made, to the attachment of any property attached under section 83 Cr.P.C, shall be made within

(A) 1 year (B) 2 years

(C) 3 months (D) 6 months

குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 83ன் படி, ஜப்தி செய்யப்பட்ட சொத்தில், கோரிக்கை அல்லது ஆட்சேபனை எழுப்புவதற்கான கால வரையறை

(A) ஓராண்டு (B) இரண்டாண்டுகள்

(C) மூன்று மாதங்கள் (D) ஆறு மாதங்கள்

11. Under Section 125 Cr. P.C., the court cannot order for the maintenance of children to

(A) Legitimate and Illegitimate minor child

(B) Legitimate male child attained majority

(C) Physically and mentally abnormal child attained majority

(D) Unmarried daughter

குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 125ன் படி, நீதிமன்றம் குழந்தைகளுக்கான பராமரிப்பு உத்தரவை எப்போது வழங்காது?

(A) முறைமண மற்றும் முறைமணமற்ற பிறப்பு, இளவர் குழந்தை

(B) முறைமண பிறப்பு வயதுவந்த பெரிய ஆண் குழந்தை

(C) உடல் மற்றும் மனம் குன்றிய வயது வந்த பெரிய குழந்தை

(D) திருமணமாகாத மகள்

12. In Cr.P.C., the power of Executive Magistrate specially empowered can order in urgent cases under

(A) Section 143 (B) Section 144

(C) Section 144A (D) Section 145

குற்றவியல் நடைமுறை சட்டத்தில், சிறப்பதிகாரம் பெற்ற நிர்வாக நடுவர், அவசர காலத்தில் உத்தரவிடும் பிரிவு

(A) பிரிவு 143 (B) பிரிவு 144

(C) பிரிவு 144A (D) பிரிவு 145

13. The court of session shall execute the death sentence under section 413 of Cr.P.C

(A) By itself issuing a warrant

(B) By the order of confirmation from the High Court

(C) By the order of appropriate government

(D) By the order of governor

குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 413-ன் படி, சார்பு நீதிமன்றம் தூக்கு தண்டனையை நிறைவேற்ற

(A) தானே பிடியாணை வழங்கலாம்

(B) உயர் நீதிமன்றத்தின் உறுதி உத்தரவின் மூலம்

(C) தகுந்த அரசின் உத்தரவின் மூலம்

(D) ஆளுநரின் உத்தரவின் மூலம்

14. A bona-fide purchaser entitled to the restituted money of stolen property, upon the application, the court can order to deliver the money

(A) Not exceeding the price paid by him

(B) Half of the price paid by him

(C) One third of the price paid by him

(D) Price paid by him with interest

திருட்டு சொத்திலிருந்து மீட்கப்பட்ட பணத்தை, நல்லெண்ணத்துடன் திருட்டு சொத்தை வாங்கியவர், பெற்றிடும் தகுதியுடன் விண்ணப்பிக்கும் போது, நீதிமன்றம் ———————— வழங்க உத்திரவிடலாம்

(A) நபர் செலுத்திய தொகைக்கு மிகாமல்

(B) நபர் செலுத்திய தொகையில் பாதி

(C) நபர் செலுத்திய தொகையில் மூன்றில் ஒரு பங்கு

(D) நபர் செலுத்திய தொகை வட்டியுடன்

15. Irregularities which vitiate proceedings of Magistrate under Cr.P.C., are

(A) To hold an inquest under section 176

(B) Attaches and sells property under section 83

(C) To issue a search warrant under section 94

(D) To tender pardon under section 306

குற்றவியல் நடைமுறை சட்டத்தில், குற்றவியல் நடுவரின் நடவடிக்கைகளை, பாதிக்கும் ஒழுங்கற்றவைகள்

(A) பிரிவு 176ன் படி புலன் விசாரணை நடத்தியது

(B) பிரிவு 83ன் படி ஜப்தி மற்றும் சொத்தை விற்பது

(C) பிரிவு 94ன் படி தேடலாணை வழங்குவது

(D) பிரிவு 306ன் படி மன்னிப்பு வழங்குவது

16. Admissions

(A) Must be in writing

(B) Must be oral

(C) Both in writing and oral

(D) Only in writing and not oral

ஒப்புக் கொள்ளுதல்

(A) எழுத்தால் இருக்க வேண்டும்

(B) வாய்மொழியாக இருக்க வேண்டும்

(C) எழுத்து மற்றும் வாய்மொழியாக இருக்கலாம்

(D) எழுத்தால் மட்டும் இருக்க வேண்டும், வாய்மொழியாக அல்ல

17. Secondary Evidence is admissible only
   (A) In the presence of primary evidence
   (B) In the absence of primary evidence
   (C) In the absence of witnesses
   (D) In the absence of hearsay evidence

இரண்டாம் நிலை சாட்சியம், ஏற்பது —————————— நிலையில் மட்டுமே.
   (A) முதல் நிலை சாட்சியத்துடன் இருக்கும்
   (B) முதல் நிலை சாட்சியம் இல்லாத
   (C) சாட்சிகள் இல்லாத
   (D) செவிவழி கேட்ட சாட்சியம் இல்லாத

18. Which one of the following is an ancient document?
   (A) Document of 12 years old
   (B) Document of 10 years old
   (C) Document of 20 years old
   (D) Document of 30 years old

பின்வருவனவற்றுள் எது பண்டைய ஆவணம்?
   (A) 12 வருட பழைய ஆவணம்
   (B) 10 வருட பழைய ஆவணம்
   (C) 20 வருட பழைய ஆவணம்
   (D) 30 வருட பழைய ஆவணம்

19. Which section of Indian Evidence Act deals with presumption as to dowry death?
   (A) Section 113
   (B) Section 113(A)
   (C) Section 113(B)
   (D) Section 114(A)

இந்திய சாட்சிய சட்டத்தின் எப்பிரிவில், வரதட்சணை மரணம் என அனுமானம் கொள்ளுதல் கூறப்பட்டுள்ளது?
   (A) பிரிவு 113
   (B) பிரிவு 113(A)
   (C) பிரிவு 113(B)
   (D) பிரிவு 114(A)

20. Find out the order of examinations of witnesses
   (A) Examination-in-chief, cross examination and re-examination
   (B) Cross examination, re-examination and examination-in-chief
   (C) Re-examination, examination-in-chief and cross examination
   (D) Examination-in-chief, re-examination and cross examination

சாட்சிகளின் விசாரணை முறையை வரிசைபடுத்து
   (A) முதல் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் மறு விசாரணை
   (B) குறுக்கு விசாரணை, மறு விசாரணை மற்றும் முதல் விசாரணை
   (C) மறு விசாரணை, முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை
   (D) முதல் விசாரணை, மறு விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை

TC. 177

143/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# SOCIAL WELFARE DEPARTMENTAL EXAMINATION
# PAPER – V – ADVANCED LAW

(With Books)

Maximum Time : 2 hours | Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

I. **Answer any FIVE questions :** **(5 × 2 = 10)**

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் :

1. Define Solitary Confinement.
தனிமை சிறைப்படுத்தலை வரையறை செய்க.

2. What is meant by Sedition?
அரசு மீதான பகைமூட்டுக் குற்றம் என்றால் என்ன?

3. To whom the warrant is directed?
பிடியாணை எவருக்கு குறிப்பிட்டு அனுப்பப்படும்?

4. Can an accused plead for guilty under section 302 of IPC?
இந்திய தண்டனை சட்டத்தின் 302 பிரிவின்படி, குற்றம் சுமத்தப்பட்டவர், குற்றத்தை ஒத்துக்கொள்ள முடியுமா?

5. Define Burden of Proof under the Indian Evidence Act.
மெய்ப்பிக்கும் சுமை என்பதை இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் வரையறை செய்.

6. What is meant by Leading questions?
விடையமை வினா என்றால் என்ன?

7. Define private documents.
தனியார் ஆவணங்களை வரையறை செய்க.

II. **Answer any FIVE questions :** **(5 × 4 = 20)**

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் :

1. What is the definition of 'appropriate government' in Chapter III of IPC?
இந்திய தண்டனை சட்டத்தில் 3வது அத்தியாயத்தில், 'உரிய அரசு' என்பதன் இலக்கணம் யாது?

2. Define 'causing death by negligence' under IPC.
இந்திய தண்டனை சட்டத்தில் 'அசட்டையினால் மரணம் விளைவித்தல்' எவ்வாறு வரையறை செய்யப்பட்டுள்ளது?

3. When the property of a person absconding is attached?
தலைமறைவாகியுள்ள நபரின் சொத்து எப்பொழுது பற்றுகை செய்யப்படும்?

4. Explain the procedure by police upon seizure of property under CrPC.
குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் சொத்தை கைப்பற்றுவதன் பேரில் காவல்துறை மேற்கொள்ளும் நடைமுறை பற்றி விவரிக்க.

5. Explain Primary and Secondary Evidence.
முதல்நிலை மற்றும் துணைநிலை சாட்சியம் பற்றி விவரிக்க.

6. What is 'Refreshing memory'?
நினைவை புதுப்பித்தல் என்றால் என்ன?

7. What is 'Admission by strangers'?
ஏதிலார் எற்ப்புரை என்றால் என்ன?

**III. Answer any FIVE questions : (5 × 10 = 50)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் :**

1. Explain the offences Stalking and Voyeurism.
பின்தொடர்தல் மற்றும் பார்வைமோகம் குற்றத்தினை விவரி.

2. Explain the offences by or relating to public servants.
பொது ஊழியர்களால் செய்யப்படும் அல்லது அவர்கள் சம்மந்தமான குற்றங்கள் பற்றி விவரி.

3. Explain the various remedies for maintenance for wives, children and parents under code of criminal procedure.
குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மனைவிகள், குழந்தைகள் மற்றும் பெற்றோர், வாழ்க்கை பொருளுதவி கேட்கும் தீர்வழிகள் பற்றி விவரி.

4. What is the procedure for execution of death sentence and imprisonment?
தூக்கு தண்டனை மற்றும் சிறைதண்டனையை நிறைவேற்றும் நடைமுறை யாது?

5. Explain the presumptions as to abetment of suicide of a married woman and presumptions as to dowry death.
திருமணமான பெண்ணின் தற்கொலைக்கு உடந்தையாய் இருந்ததற்கான அனுமானம் மற்றும் வரதட்சணை மரணம் குறித்து அனுமானம் பற்றி விவரி.

6. State Burden of Proof. Explain shifting of burden of proof.
மெய்பிக்கும் பொறுப்பு என்பதனை விளக்குக. மெய்பிக்கும் பொறுப்பு எவரை சாரும் என்பதன் மாறுதல்களை விவரி.

---